# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapte... | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. Spl.CC.03/2007 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.7<br>Defence<br>Court |

Name இராஜேந்திரன்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07/08/2019.

*முதல் விசாரணை:*

*நான் கோவில்பட்டி பாரதி நகர் 6வது குறுக்கு தெருவில் குடியிருந்து தற்போது சென்னை, அடையாறு, மத்திய கைலாஷ், ஸ்ரீராம் நகர் 6வது தெரு 2வது மாடி, கதவு எண்.6ல் குடியிருந்து வருகிறேன். தற்போது எனக்கு 62 வயதாகிறது. நான் சென்னையில் எலெக்ட்ரிக் கடையில் வேலை பார்க்கிறேன். நான் கோவில்பட்டியில் குடியிருந்த போது தெற்கு பஜாரில் கதவு எண்.44பி-ல் மெஜஸ்ட்டிக் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற பெயரில் பங்குதாரராக இருந்து வியாபாரம் செய்தேன். என்னுடன் கோவில்பட்டியை சேர்ந்த முனியசாமி மனைவி பிரேமா மற்றும் கணேசன் மற்றும் நானும் பங்குதாரர்களாக இருந்து 1988ல் கடையை ஆரம்பித்தோம். 1997-98 கால கட்டத்தில் பங்குதாரர்களுக்கான கணக்கை முடித்து விட்டு நான் ஆர்.எம் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற பெயரில் கடை நடத்தினேன். 2003-2004 கால கட்டத்தில் கடை நஷ்டமானதால் கடையை மூடி*

விட்டேன். 1995-96 கால கட்டத்தில் எங்கள் கடைக்கான பில் அடிக்கட்டு புத்தகம் எங்கிருக்கிறது என்று எனக்கு தெரியாது. புத்தகங்கள் பொதுவாக 3 வருடங்களுக்கு மேல் வைப்பதில்லை. அவைகளை அழித்து விடுவோம். எங்களது கடையில் எட்டையபுரம் டவுண் பஞ்சாயத்திலிருந்து மின் சாதனங்கள் வாங்குவார்கள். அதற்கு நான் ரொக்கமாக பணம் பெறுவேன். சில சமயங்களில் 2, 3 நாட்களில் பணம் தருவதாக கூறி மின் சாதனங்கள் வாங்கி செல்வார்கள். மேற்படி பஞ்சாயத்தில் இருந்து 4,5 முறை என்னிடம் மின் சாதனங்கள் வாங்கினார்கள். மொத்தமாக சுமார் ரூ.4,000/-க்கு மின் சாதனங்கள் வாங்கியிருப்பார்கள். பஞ்சாயத்தில் வேலை செய்யும் நபர்கள் வந்து மின் சாதனங்களை வாங்கி செல்வார்கள். பஞ்சாயத்தில் உள்ள ஊழியர் மூலம் பணத்தை கொடுத்து அனுப்புவார்கள். சுமார் ரூ.600/-, ரூ.700/-க்கு வாங்குவார்கள். மேற்படி பஞ்சாயத்திலிருந்து காசோலை மூலமாக பணம் கொடுப்பதில்லை. காசோலை எண்.ஏஎப்612425 நாள்.24.07.1995 தேதியிட்ட ஆர்.எம். எலெக்ட்ரிக்கல்ஸ் கோவில்பட்டி என்ற ரூ.2,875/-க்கானது மற்றும் அஞ்சலக காசோலை எண்.361369 நாள்.24.07.1995 தேதியிட்ட ஆர்.எம். எலெக்ட்ரிக்கல்ஸ் கோவில்பட்டி என்ற ரூ.1,638/-க்கான இரண்டு காசோலைகள் எனக்கு வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தற்போது சாட்சியம் அளித்தபடி லஞ்ச ஒழிப்பு துறை போலீசாரிடம் சொன்னேன். எங்களது பங்குதாரர் நிறுவனம் பதிவு செய்யப்படவில்லை. எட்டையபுரம் டவுண் பஞ்சாயத்திலிருந்து எனக்கு எந்த தொகையும் பாக்கி வரவேண்டியதில்லை.

மறு விசாரணை.

இல்லை.

ஒம்/- எஸ்.ஹேமா,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.